பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி தஞ்சாவூர்

தமிழ் மன்ற தேர்வு.

இரண்டாம் ஆண்டு இயற்பியல் "அ" பிரிவு .

பண்டைய இலக்கியம்

(16LCT4)

மதிப்பெண் :75 நேரம் : 3.00

நாள்: 26.05.2020

I இரண்டு மதிப்பெண்கள் வினாக்கள்

(2×10=20)

01. " அவர் பிரிவை ஆற்றும் வன்மை என்பால் இல்லை" என்பது யாரின் கூற்று ?

02. உலர்ந்த கிளையையுடைய ஓமை மரத்தினைக் குத்தியது ஏது ?

03. குண்டிகைச் செம்பு போல் காட்சியளித்தது எது ?

04. வளமற்ற நகராக பரிசில் பெற்ற பாணன் கூறியவை எவை ?

05. அகநானூறு எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது?

06. கையறுநிலை என்றால் என்ன ?

07. நாலடியார் என்னும் நூலுக்கு அதிகாரம் வகுத்துவரும் யார் ?

08. பழமொழி நானூறு எதனின் பெட்டகமாகத் திகழ்ந்து வருகின்றது ?

09. கலித்தொகை எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது ?

10. நெடுநல்வாடையின் பாடுடைத்தலைவர் யார் ?

II ஐந்து மதிப்பெண் வினாக்கள் :(5×5=25)

11. அ) விருந்து வாயிலாகப் புக்க தலைவன் கூறியதை நற்றினை பாடல் வழி விளக்குக :

(அல்லது )

ஆ) மகளை போக்கிய தாய் உரைத்தை பொருள் மாறாமல் விளக்குக:

12 . அ) தோழி தலைவியை மணக்கும் படி தலைவனுக்கு கூறிய அறங்கள் யாவை ?

(அல்லது)

ஆ) சங்கத்தமிழ் வளர்த்த மதுரையின் வறுமை நிலை என்பதை விவரி:

13 . அ) செவிலித்தாய் தன் மகளின் மென்மையையும் ,அவள் போன பாலை நிலத்தின் வன்மையையும் எண்ணி எவ்வாறு வருந்துகிறாள் ?

(அல்லது )

ஆ) பொதுவியல் திணை கூறும் செய்திகளை தொகுத்து எழுத்துக:

14. அ) குறிப்பு வரைக :

நாலடியார் கூறும் செய்திகளை இவ்விரு தலைப்பினை கொண்டு விளக்குக:

- நட்பு
- சான்றோரின் குணம்.

(அல்லது)

ஆ) "அறிமடமும் சான்றோர்க்கு அணி" என்பதை பழமொழி நானூறு வழியாக விளக்குக :

15. அ) பதிற்றுபத்து என்னும் நூலின் சிறப்புகளை விவரிக :

(அல்லது)

ஆ) மதுரைக் காஞ்சி என்னும் பத்துப்பாட்டு நூலின் தன்மையை விளங்குக:

III பத்து மதிப்பெண் வினாக்கள் : (10×3 =30)

( எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்கவும்)

16. தலைவனின் பிரிவினைத் தாங்காமல் தலைவி இரங்குவதாக எங்ஙனம் இடம்பெற்று உள்ளது அவற்றை விவரிக :

17. நல்லியக்கோடனின் கொடைத்திறத்தை சிறுபாணாற்றுப்படை வழி நிறுவுக :

18. புறநானூற்றில் அறியப்படும் செய்திகளை தொகுத்து எழுதுக :

19. “மானம்” என்ற அதிகாரத்தின் வழியாக திருவள்ளுவர் கூறிய செய்திகளை பாவகை மாறாமல் எழுதுக:

20. பதிணெண்கீழ்கணக்கு நூல்களின் பெருமையையும் , அவற்றின் சிறப்புகளையும் , கட்டுரை வடிவில் தருக :

********